**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 15/2024**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : பாலசுப்பிரமணியன் | **Caste** | : | |
| **Father's Name** | : பூமிநாதன் | **Calling** | : | சார்பு ஆய்வாளர் - திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | **33** |
| | | **Dated** | : | **04.07.2025** |

**04.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–13 திரு. **பாலசுப்பிரமணியன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 25.07.2023ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது தலைமைக் காவலர் 1764 நல்லுச்சாமி

தாலுகா காவல் நிலைய குற்ற எண்.414/2023, பிரிவுகள்.279, 337 இதச வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு 26.07.2023ம் தேதி காலை 08.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாப்பியான் செபஸ்தியார், சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். பின் இவ்வழக்கின் சாட்சிகளான மலர்விழி, ராம்கி, ராஜகோபால், மணிகண்டன், பாப்பியான் செபஸ்தியார், சேகர், தலைமைக் காவலர் நல்லுச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் காயம்பட்ட கோவிந்தராஜ் என்பவர் மேல்சிகிச்சைக்காக அன்றைய தினமே மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின் 28.07.2023ம் தேதி மாலை 14.50 மணிக்கு இறந்துவிட்டதாக 17.35 மணிக்கு வந்த தகவலின் பேரில் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 279, 37 இதச விலிருந்து 279, 304(A) இதச ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **(வரைபடம் அதசாஆ.4, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. )** ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அசா.1 மலர்விழி எனது விசாணையில் விபத்தானது TVS 50 என்ற வாகனத்தால் ஏற்பட்டது என சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அசா.1 மலர்விழி எனது விசாரணையில் ராம்கி எவ்வாறு தகவல் கொடுத்தார் என குறிப்பிட்டுள்ளாரா என்றால் போன் மூலம் சொன்னதாக குறிப்பிட்டுள்ளார். போன் நம்பரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.2 ராம்கிக்கும் இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கும் சம்பவ இடம் அவர்களது குடியிருப்பு பகுதி இல்லை என்றால் சரிதான். அசா.2 தனது நண்பரை பார்க்க சென்றாதாக குறிப்பிட்டுள்ளார் அந்த நண்பரின் பெயரை எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா2 எனது விசாரணையில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் முகப்பு விளக்கு இல்லாததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அசா.2 சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட சாட்சி என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.இவ்வழக்கின்

பார்வை மகசர் சாட்சிகள் காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. வழக்கின் மாதிரி வரைபடம், பார்வை மகசர் நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.04 15:35:33 +0530

Judicial Magistrate No.I

Dindigul.